1974 சனவரி 19]

வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. காட்டுப்புத்தூர் பேரூராட்சியின் நிதி வசதி பற்றிய மாவட்ட ஆட்சியாளரின் குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அக்குறிப்புகளின் பேரில் அரசு ஒப்புதலைப் பெற்று இத்திட்டம் துவக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த காட்டுப்புத்தூர் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர் வழங்கு வதற்கான ஆய்வு எப்பொழுது மேற்கொள்ளப்பட்டது? இவ்வளவு நாள் கால தாமதம் ஆவதற்கு என்ன காரணம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆய்வு மதிப்பீட்டிற்கு 8—9—1971 ஆம் நாளிட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நடவடிக்கை மூலமாக ஒப்புதல் அளிக்கப்பெற்று ஆய்வு வேலைகள் 22—1—1971-இல் தொடங்கப்பெற்று, 26—7—1972-இல் முடிவடைந்துள்ளன. ஆனால், நிதி வசதியைப் பொறுத்துத்தான் எந்த ஒரு திட்டமும் நிறைவேற்றப்பட முடியும். அந்த நிதி வசதி என்பது, பின்னர் மெயின்டெனென்ஸ் செய்வதற்கு, நடைமுறைப்படுத்துவதற்கு ஆகும் செலவுத் தொகையை அந்தப் பேரூராட்சி மன்றமோ, ஊராட்சி மன்றமோ செலுத்துவதற்கு வாய்ப்புப் பெற்றிருக்கிறதா, என்பதைப்பற்றி அறிய மாவட்ட ஆட்சியாளருடைய ஆலோசனை கேட்கப்பட மாவட்ட ஆட்சியாளருடைய ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பொதுவாக, பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர் திட்டத்திற்கு ஆய்வு வேலையைத் துவக்கு வதற்காகப் பேரூராட்சியின் நிதியிலிருந்து பெருந்தொகை முன் பணம் கட்டுகிறார்கள். ஆனால், அந்தத் தொகைக்குச் சிறிய வட்டி கூட அரசாங்கம் தருவதில்லை. பிறகு, நிறைவேற்றுவதற்கு இல்லை யென்றால், அந்தத் தொகையும் திருப்பித் தரப்படுவதில்லை. ஆகவே பேரூராட்சிக்குப் பெரும் தொகை இழப்பு ஏற்படுகிறது. இதை மனத்திலே கொண்டாவது, ஆய்வினை விரைவில் முடித்துத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினா; திருமணம் செய்து கொண்ட ஒருவன், 'என் மனைவிக்கு மாமனார்கூட சோறு போடவில்லை' என்று குற்றம் சாட்டுவது போலிருக்கிறது. இந்தத்

திட்டம் அந்த ஊராட்சி மன்றப் பகுதியில் வாழ்கிற மக்களுடைய குடிநீர்த் திட்டம். அதனுடைய ஆய்வு நடைபெற்று அது பயனுள்ளதாக இருக்கிறது என்று தீர்மானித்தால், கடன் பெறுகிற முறையைப் பயன்படுத்தி, அதற்காகக் கடன் நிதி பெற்று அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். அந்தக் கடனைத் திருப்பித் தருகிற ஆற்றல் அந்தப் பேரூராட்சி மன்றத்திற்கு இருக்கவேண்டும். அந்த ஆற்றல் என்பது மக்கள் செலுத்துகிற வரியைப் பொறுத்தோ, குழாய்களுக்குத் தருகிற கட்டணத்தைப் பொறுத்தோ ஏற்படுகிறது. இதற்கு மாவட்ட ஆட்சியாளர் தெரிவிக்கிற ஆலோசனையைப் பெற்றுதான் முடிவுகாணப்படும்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள்

***5 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 செப்டம்பர் முடிய தொழுநோய்க்காரர் புனர் வாழ்வு விடுதிகளில் எத்தனை பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர் ?

(இ) அதற்கான செலவு விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 2,360 பேர்கள்.

(இ) ரூ. 13,86,742.58.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இப்பொழுது பல நகரங்களிலும் பிச்சைக்காரர்கள் தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன. அவற்றைத் தடுத்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு அரசு என்ன வழிவகை செய்யப் போகிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, பொதுவாக பிச்சை எடுப்பதைத் தடை செய்து ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. இப்பொழுது குறிப்பிட்டது தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இல்லங்களில் எத்தனை பேர் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள், அதற்கான செலவினங்கள் என்ன என்பதைப் பற்றியதாகும். இப்படிப்பட்ட பிச்சைக்காரர்களைச் சட்டப்படி